අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

## பரதநாட்டியம்

## புள்ளியிடும் திட்டம்




தொலைக்கல்வி மேம்பாட்டுக்கிளை - கல்வி அமைச்சு

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

**கல்வி அமைச்சு**

| 45 | T | I, II |
|---|---|---|

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

**புள்ளி வழங்கும் திட்டம்**

**பரதநாட்டியம் I**

1. பூமாதேவி
2. மெய்யடவு
3. அதீதளடுப்பு
4. ஸ்ரீ முத்துசுவாமி தீட்சிதர்
5. மகாபரதசூடாமணி
6. பதாகம்
7. லோகதர்மி
8. உல்லோகிதம்
9. மீனவ நடனம்
10. ஆதி தாளம்
11. மண்டியடவு
12. துணங்கை
13. ஜாவளி
14. துடிக்கூத்து
15. தில்லானா
16. வாள்நடனம்
17. இராகமாளிகை
18. நீலோற்பலம்
19. சிஷ்ய இலட்சணம்
20. பச்சை
21. வெள்ளை
22. மிருதங்கம்
23. நந்திவர்மன்
24. தென்மோடி
25. பஞ்சகச்சம்
26. கிருஷ்ண அவதாரம்
27. பக்தி பாவம்
28. வழுவூர் இராமையாப்பிள்ளை
29. வீணை
30. உத்ளவனம்
31. முணுமுணுத்தல்
32. மலர்களுக்கு
33. தக தகிட
34. திஸ்ர ஜாதி
35. A B D
36. புல்லாங்குழல்
37. வாமணஅவதாரம்
38. கடகாவர்த்தனம்
39. குச்சுப்புடி
40. சிருங்காரம்

(1X40=40 புள்ளிகள்)

# நடனம் II

1. i. உத்பிளவனம்
   ii. பதவர்ணம்
   iii. பரதநாட்டியம்
   iv. தாராகணம்
   v. பாந்தவ்யஹஸ்தம்
   vi. சப்தம்
   vii. கட்வா
   viii. முத்திரைகள்
   ix. வல்லின ஓசை, மெல்லின ஓசை
   x. சப்தம், அஷ்டபதி

*02.*

I. இராகம் : ஆரபி /சாவேரி

தாளம் : ஆதி / ரூபகம் (2 புள்ளி)

II. அலாரிப்பை தொடர்ந்து வரும் உருப்படி.

இது ஒரு நிருத்த உருப்படி.

ஸ்வரங்களை தாதுவாகவும் மாதுவாகவும் கொண்டுள்ளது.

முதலில் தீர்மானத்தில் ஆரம்பித்து நான்கு அன்றேல் ஐந்து கோர்வைகளைக் கொண்டதாக அமைந்தள்ளது.

உருப்படியினை மெருகூட்டுவதற்கு இடையிடையே மெய்யடவு காணப்படும்.

இது பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற மூன்று கிரமங்களைக் கொண்டுள்ளது.

இவ்வுருப்படியை சுவாதித் திருநாள் மகாராஜா பொன்னையாபிள்ளை போன்றோர் இயற்றியுள்ளனர்.

(3 புள்ளி)

III. ஆரபி ஜதீஸ்வரம் 1 வது கோர்வை.

| $I_4$ | $0_2$ | $0_2$ |
|---|---|---|
| த, க, தி, மி,<br>தெய்யும் தத்த<br>தெய்யும் தா/ | தெய்யும் தத்த<br>தெய்யும் தா/ | தகதிமி தெய் தெய்<br>திதி தெய்// |

சாவேரி ஜதீஸ்வரம் 1 வது கோர்வை.

| $0_2$ | $I_4$ |
|---|---|
| த, க,<br>தாம்,<br>த, கி,<br>ததீங்கி | தி, மி, தெய், தெய்,//<br>தத், தெய், தா ஹா //<br>ட, ததீங் கிணதொம் // |

(7 புள்ளி)

*3.* I. **அவஹித்தம்**

ஷ்ருங்கார நடனே சைவ லீலா கந்துக தாரணேஃ

குஜார்த்தே யுஜ்யதே ஸோயம் அவஹித்தஹ் கராஃரிதஹஃஃ

கருத்து :

ஷ்ருங்கார நடனம் - மகிழ்சியில் நடனாடுவது

லீலா கந்துக தாரணம் - பந்துகளுடன் விளையாடுதல்

குஜம் - மார்பு

II. **புஸ்பபுடகம்:**

நீராஜன விதௌ வாரி பலாதி க்ரஹனே பிசஃ

ஸந்தியாயாம் அர்க்ய தானேச மந்த்ர புஷ்பேச யுஜ்யதேஃஃ

நீராஜன விதௌ - கடவுளக்கு கற்பூர தீபம் காட்டல்

வாரி வலாதி க்ரஹனே - தண்ணீர் பழங்கள் முதலியவற்றைப் பெற்றுக் கொள்ளல்

ஸந்நியாயம் அர்க்ய தானேச - சந்நியா காலங்களில் தெய்வங்களுக்கு நைவேத்தியம் கொடுத்தல்.

மந்ர புஷ்பம் - மந்திர சக்தியூட்டப்படட மலர்.

III. தாமர சூடம்.

குக்குடாதௌ பகே காகே ஓஷ்ட்ரே வத்ஸேசலேகனேஃ

யுஜ்யதே தாம்ர சூடாக்ய கரோ பரதவே திபிஹிஃஃ

| | | |
|---|---|---|
| குக்குடாதௌ | - | சேவல் |
| பகே | - | கொக்கு |
| காகே | - | காகம் |
| ஓஷ்ட்ரே | - | ஒட்டகம் |
| வத்ஸேச | - | கன்றுக்குட்டி |
| லேகனெ | - | எழுதுகோல் |

IV. சுகதுண்டம்.

பாணப்ரயோகே குந்தார்த்தே ஆலயஸ்ய ஸ்ம்ருதிக்ரமேஃ

மர்மோக்தியாம் உக்ரபாவே/ சுகதுண்டோனி யுஜ்யதேஃஃ

பாணப்ரயோகே - அம்பை எய்தல்

குந்தார்த்தே - ஈட்டி

ஆலயஸ்யஸ் ம்ருதிக்ரமே - பழையவற்றை நினை கூறுதல்

மர்மோக்கியாம் - முணுமுணுத்தல்

உக்ரபாவேஷ - கடுங்கோபம்

சுகதுண்டோனி யுஸ்யதே - இவை சுகதுண்ட விநியோகம் ஆகும்

*4.*

| வடமோடி | தென்மோடி |
|---|---|
| 1. ஆரியக் கூத்து. | தமிழகக் கூத்து |
| 2. போர் சார்ந்த கதை. வெற்றி பிரதான நோக்கம். துன்பியல் தன்மை வாய்ந்தது. | காதல் சார்ந்த கதை போர் இடம் பெறலாம் காதலுக்காக அமையும். |
| 3. சுவை வீரம், கோபம் அழுகை உண்டு. | சுவை வியப் பு உண்டு. |
| 4. நுணுக்கம் குறைந்த விரைவான அசைவு கொண்ட ஆட்டம். வரவு ஆட்டம் ஒரு பக்கம் பார் ப்போரை நோக்கி நேர்முகமாக்கும் கால மேற்றுதல் இல்லை. ( துரித ஆட்டம்) | நுணுக்கமான கடின ஆட்டம். வட்டக் களரியில் நாலு பக்கம் பார் ப்போருக்கு ஏற்ப சுற்றி ஆடப்படும். கால மேற்றுதல் இருக்கும். |
| 5. நடிகர் வரவுப்பாடல் பாடித் தன்னை அறிமுகம் செய்வார். விருத்தம் இழுத்துப் பாடப்படும் முறையில்லை கூத்தர் ஒரு பாடலை பாட பக்க பாட்டுக்காரர் தொடர்ந்து அப்பாடலை முழுமையாகப் பாடுவார். | சபையோரே வரவுப் பாடல் பாடி நடிகரை அறிமுகம் செய்வார். விருத்தம் இழுத்துப் பாடப்படும். கூத்தர் ஒரு பாடலை ஆரம்பிக்க அப்பாட்டின் கடைசிப் பகுதியை மட்டும் பிற்பாட்டுக்காரர் பாடுவார் சபையோரே நாடகத்தை நடத்திச் செல்வர். |
| 6. கூத்தின் பாடல்கள் மூலமே கூத்தர் பற்றிய அறிமுகம் இடம் பெறும். | |
| 7. உடை ஒப்பனை பாரமான கண்ணாடி மணிகள் பதிக்கப்பட் ட கரப்புடுப் பு, வில்லுடுப்பு பாரம் கூடிய கிரீடம் அணிந்திருபர். | மணிகள், பூக்கள் பொருந்திய பாரம் குறைந்த உடை, பாரம் குறைந்த பூ முடி அணிந்திருப்பர். |

*5. 1.* மீனவ நடனம்

கடலுக்குச் சென்று வலை வீசி மீன்களைப் பிடித்துக் திருப்புவதையும், மீனவரின் மனைவிமார் கரையோரத்தில் உணவுடன் அவர்களின வரவை எதிர் பார்த்து உணவு கொடுத்து வீட்டுக்கு அழைத்துச் செல்வதையும் சித்தரிப்பதாக இந் நடனம் அமையும்.

இந் நடனத்திற்கு ஆண்கள் சாரம் அணிந்தும் பெண்கள் சாதாண சேலை உடுத்தியும் ஆடுவார்.

ஆண்கள் தலையில் ஒலைப்பெட்டி அல்லது தலைப் பாகை அணிவர்.

இதற்குரிய பாடல் அமைப்பு “ஏலேலோ ” என்ற சந்தத்திற்கேற்ப அமைக்கப்படும்.

இந் நடனத்திற்குரிய பக்க வாத்தியங்களாக தபேலா, ஹர்மோனியம் என்பன பயன்படுத்தப்படும்.

யாழ்ப்பாணம், மன்னார் போன்ற பிரதேசங்களிலும் இந் நடனம் ஆப்பட்டு வருகிறது.

மீனவரின் வாழ்க்கை முறைகள் இந் நடனங்களில் சித்தரித்து அபிநயிக்கப்படும்.

*2.* சபாநாயகன்.

ஸ்ரீமான் சகல சாஸ்திரம் உணர்ந்தவன்.

கலாசோதனை தெரிந்த நிபுணன், தீயபாவம் அற்றவன்.

நற்குணம், தயவு, சத்தியவாக்கு, தாஷனியம் இவற்றை உடையவன்.

*புண்ணியம், ஈகையாளன், புகழ், சௌர்யம், ஞானம் இவற்றில் சிறந்தவன்.*
*பிறரை காக்கும் நற்குணமுடையவன்.*
*கீதம் பொருந்திய இசையின் மேன்மை அறிந்தவன்.*
*சரசம், பொறுமை, வேடிக்கை இவற்றில் மனம் செலுத்தும் கலைநய விலாசமுடையவன்.*
*காமனை ஒத்த அழகு உடையவன்.*
*யூகமுடையவன் இலக்கண, இலக்கியம் அறிந்தவன்.*
*கனவான் தராதரம் அறிந்த சதுரன் இத்தகையோன் சபைக்கு அதிபதி ஆவான்.*

*அஷ்டபதி*
*கி.பி 17 ம் நூற்றாண்டில் ஜெயதேவரால் எழுதப்பட்ட கீதகோவிந்தம்.*
*இவர் ஒரிஸாவைச் சேர்ந்தவர். இவர் கீத கோவிந்தத்தை சமஸ்கிருதத்தில் எழுதினார்.*
*இது முழுக்க முழுக்க கிருஷ்ணன் ராதையின் சிருங்கார லீலைகள் பற்றியது.*
*இந்தப் பாடல்களைத் தனித்தனியாகச் சொல்லும் போது அஷ்டபதி என்பர்.*
*அஷ்டபதி என பெயர் வரக்காரணம் இது எட்டு பந்திகளைக் கொண்டதும் எந்தப் பந்தியிலும் நான்கு வரிகள் இருக்கும்.*
*அஷ்டபதியிலே மொத்தம் 24 பாடல்களும் 12 உட்பிரிவுகளும் இருக்கின்றது.*
*ஜெயதேவரின் ராகங்கள் நாட்டுப்புறச் சங்கீதத்தை அடிப்டையாகக் கொண்டது.*

(3x4=12)

*6. 1. சங்க காலம்*
*2. கூத்தராற்றுப்படை, பொருணராற்றுப்படை*
*3.*

*இக் காலத்தில் மக்களின் வாழ்வில் இசையும் நடம் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன்.*
*வேத்தியல், பொதுவியல் எனும் இரு நடனங்கள் காணப்பட்டன்.*
*மன்னர் அவையில் ஆடுவது வேத்தியல், பொது இடங்கில் ஆடுவது பொதுவியல்.*
*நடனம் கூத்து, ஆடல், குனிப்பு என அழைக்கப்பட்டது.*
*நடனம் ஆடுவோர் கோடியர், வைரியர், கூத்தர், கண்ணுலர், பொருநர், விறலியர், பரதர், நாடகக் கனிகையர் என அழைக்கப்பட்டனர்.*
*நடனம் மன்னர்களின் வீரம், வெற்றி, கொடை என்பன அறிவிக்கும் சாதனமாக காணப்பட்டது.*
*இக்கால மக்கள் குழுவாக வாழ்ந்தால் குழு நடனங்கள் காணப்பட்டன.*
*மன்னரை காணச் செல்லும் விறலியரே தனிநடனம் செய்தனர்.*
*இக் காலத்தில் குரவை, துணங்கை, வெறியாடல் போன்ற ஆடல்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.*
*இக் காலத்தில் துணங்கை பெண்களால் ஆடப்படுவது*
*நடன அரங்கு தெரு மணலுள்ள இடம், விட்டின் முன் பக்கம் முதலியவற்றிலே இடம் பெற்றன.*
*இக்கால மன்னர்கள் கலைஞர்களை ஆதரித்து பரிசுகளும் கௌரவங்களும் வழங்கியமையால் ஆடல் செழிப்புற்று காணப்பட்டது.*

*7.*

*தென்னிந்தியாவின் கிழக்கு கரையோரத்தில் 1905 ம் ஆண்டு பிறந்தார்.நாட்டிய ஆசான்களைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்.*

*தாய் மாமனான வழுவூர் மாணிக்கம் பிள்ளையிடத்து பரதநாட்டிக் கலையை குருகுல முறைப்படி ஏழாவது வயதில் பயிலத் தொடங்கினார்.*

*1938 ம் ஆண்டில் மயிலாப்பூரில் குடியேறி அங்கு "வழுவூர் நுண்கலை மன்றம்" என்னும் ஸ்தாபனத்தை நிறுவி, நூாற்றுக்கணக்கான மாணவர்களுக்கு நடனம் பயிற்றுவந்தார்.*

*வழக்கொழிந்திருந்த நாட்டிய சாஸ்திரத்தில் காணப்படும் 108 கரணங்களையும் ஆராய்ச்சி செய்து அவற்றை மீண்டும் பரதநாட்டியத்தில் புகுத்திய பெருமை இவரையே சாரும்.*

*கனபஞ்ச இராகங்களிலமைந்து தியாகராஜ சுவாமியின் "பஞ்சரத்தின "கீர்த்தனைகளுக்கு முதன் முதலில் நடனம் அமைத்தவர் இவரே.*

*முத்துத் தாண்டவர், கோபாலகிருஷ்ண பாரதியார், பாபநாசம்சிவன், அருணாசலக் கவிராயர் ஆகியோரது பாடல்களை அதிகமாகப் பரதநாட்டியத்தில் கையாண்டார்.*

*பழனிமுருகன், திருப்பதி வெங்கடேஸ்வரர், தஞ்சை பிருகதீஸ்வர் ஆகிய தெய்வங்களின் பெயரில் தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளின் பல கீர்த்தனைகளையும் வர்ணங்களையும் பாடி நடன அமைப்பு செய்து மேடையேற்றினார்.*

*ஜதீஸ்வரங்கள், தில்லானாக்கள், தமிழ் பதங்கள் அமைந்துள்ளனர்.*

*தெய்வீக ஆடற்கலை என்னும் நாட்டிய நூலையும் எழுதி வெளியிட்டார்.*

*பரத நாட்டியத் துறைக்கு பங்களிப்பு செய்தமைக்காக நாட்டிய கலாகேசரி, இசை பேரறிஞர், கலைமாமணி, நாட்டியச் செல்வம், பத்மஸ்ரீ ஆகிய விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.*

*வழுவூர் நாட்டியபாணி என்பது இவரது குடும்பச் சொத்து.*

*இவரிடம் பரதநாட்டியம் பயின்ற மாணவர்களில் ஆண், பெண் ஆகிய இரு பாலரும் அடங்குவர்.*

*இவர்கள் தலை சிறந்த நடன ஆசிரியர்களாகவும், நட்டுவனார்களாகவும், நாட்டிய நெறியாளர்களாகவும், தயாரிப்பாளர்களாகவும், ஆய்வாளர்களாகவும், விமர்சகர்களாகவும், அவைக்காற்று கலைஞர்களாகவும் விளங்குகின்றனர்.*

*கலைஞர்களாக பிரபல்யம் அடைந்தவரகள் கமலா, ஆனந்தி, சித்ரா விஸ்வேஸ்வரன், இராதா, வையந்திமாலா போன்றோர் முன்னிலையில் உள்ளனர்.*

*இலங்கை மாணவரகளான திரிபுரசுந்தரி யோகனாந்தம், கார்த்திகா கணேசர், மாலதி சிவகுமார், சுபாசினி பத்மநாதன் போன்றோர் முன்னிலையில் உள்ளனர்.*

*இவர் 1991 ம் ஆண்டு தனது 86 ஆவது வயதில் இறைவனிடி சேர்ந்தார்.*